# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

இந்தியாவில் எல்லாப் பிரச்சினைகளுக்கும் இந்திய சமுதாயத்தின் சாதி, மற்றும் வர்ணாச்ரமப் பாகுபாடுகள் தான் காரணம் என்பது ஒரு உலகளாவிய கணிப்பு. இதை அந்நியர்கள் கூறுகிறார்கள். இந்தியர்கள் கூறுகிறார்கள், இந்துக்கள் கூறுகிறார்கள் தற்கால எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் இதையே வழிமொழிகிறார்கள். அதென்ன இந்தியாவுக்கு ஒரு முதலைத்தனமான மூர்க்கப் பிடிவாதம்? தன் முன்னேற்றத்தை முடக்கி வைக்கும் வர்ணாச்ரம, ஜாதி பாகுபாடுகளை நம் பாரதம் ஏன் கை நெகிழ மறுக்கிறது? இதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். முதல் காரணம்: பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு உலக நாடுகள் அனைத்தும் வியக்கும் வண்ணம் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக அந்தஸ்துகளைப் பெற்றிருந்த நம் பாரதம் சாதி வர்ண பேதங்களோடு தான் அப்படி சாதித்துக் காட்டியது. இரண்டாவது காரணம் வர்ணாச்ரம சாதி பிரிவினைகள் மீது சுமத்தப்படும் பழிகள் அபாண்டமானவை ஒன்றை ஒன்பதாக்கிக் கூறுகிறார்கள்.

சாதிப்பிரிவினையால் மட்டுமே ஒரு சமுதாயத்தின் இயக்கம் நிகழ்ந்து கொண்டிருந்தால் அந்தச் சமுதாயம் முன்னேற முடியாது. வருண சாதி பிரிவுகளை ஊடுருவி அவற்றைத் தாண்டிப் புகழ் பரப்பும் அறிவு மற்றும் திறமைகளை ஒரு சமுதாயம் நம்பும்போதும் ஏற்கும் போதும் தான் அது முன்னேற முடியும். இந்தியா கடந்த காலத்தில அப்படித்தான் இருந்தது. மீனவப் பெண்ணின் மகளான வியாசனும், இடையன் மகனான கண்ணனும், அரண்மனை தாசி மகனான விதுரனும், வேட ஜாதி குகனும், சபரியும், வேடர் குலத்துதித்த திருமங்கை மன்னனும், இப்படி ஒரு சமுதாயப் பிண்ணனி இருந்தால்தான் புகழ்பெற முடிந்தது.

திறமையும் அறிவும் எங்கெல்லாம் காணப் பட்டனவோ அங்கெல்லாம் இந்து சமுதாயம், மீதி அனைத்து பாகுபாடுகளையும் தள்ளி வைத்து விட்டு அங்கே சென்று அந்த அறிவுக்கு மதிப்பளித்து அதை ஏற்றுக்

திரு ஜோசப் அவர்கள் ஆற்றியுள்ள நூற்றுக்கணக்கான
சொற்பொழிவுகளின் ஒலி நாடாக்கள் மற்றும் குறுந்தகடுகள்
(cassets & CDs) மேற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

கொண்டிருக்கிறது. இன்று உலகினர் விமர்சிப்பது போல வர்ணாச்ரமம் என்ற கால்கட்டை இறுக்கமாகத் தானே போட்டுக் கொண்டு இந்து சமுதாயம் ஒருநாளும் தடுமாறினதில்லை. அதன் முன்னேற்றம் ஜாதி மற்றும் வர்ணாச்ரம பாகுபாடுகளால் முடங்கியதாகக் கூறுகிறவர்கள் அதை நிரூபிக்க முடியாது. மேடைப் பேச்சில் கைதட்டல் வாங்கித் தரும் இந்த வாதம் வழக்கு மன்றத்துக்கு வந்தால் சாயம் வெளுத்துப் போகும். இதற்கு ஆதாரமாக ஆசார்ய ஹ்ருதயம் அருளிய அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்சொல்லும் ஒரு கூற்றைப் பார்க்கலாம். வர்ணாச்ரமம் என்ற பிரிவு ஆத்மாவுக்கு வந்தேறி தான். ஒருவனுடைய ஞானத்தையோ, முன்னேற்றத்தையோ அது தடுக்க முடியாது என்று கூறும் அவர் 89ம் சூர்ணிகையில் 'இதின் ஔபாதிகத்வம் ஒரு ராஜா தன்னை மறைமுனிவன் ஆக்கினவன் நீசனாக்குவித்த ராஜாவை வாரே உறுப்பாக யஜிப்பித்து ஸ்வர்க்கமேற்றினபோதே தெரியும்' என்கிறார்.

விச்வாமித்திரரின் கதையை எடுத்துக் கொள்கிறார் நாயனார். திரிசங்கு என்ற க்ஷத்ரியனை வசிஷ்டகுமாரர்கள் சண்டாளன் ஆக்கிறாக்குகிறார்கள். அவன் போய் க்ஷத்திரிய முனிவனாகிய விச்வாமித்ரரின் காலில் விழுந்தான். இந்த ஜன்மத்திலேயே தான் பிரம்மரிஷியாக வேண்டும் என்ற நோக்கத்தோடு தவம் செய்து கொண்டிருந்த க்ஷத்ரியனான விச்வாமித்ரர் தான் பிராம்மணன் ஆகாமல் இருக்கும்போதே ஒரு யாகம் செய்து சண்டாளன் திரிசங்குவை சொர்க்கத்திற்கு ஏற்றினார். இந்த விஷயத்தை பொறுமையாக சிந்தித்துப் பாருங்கள். கூத்து மேடை நடிகர்கள் ஆண்வேடம் களைந்து பெண் வேடம்போடுவது போலவும், ராஜபார்ட் நடிகர், கூலியாள் வேடம் போடுவதுபோலவும் இந்த நாட்டில் வர்ணம் என்பது எவ்வளவு சுலபமாக மாற்றத் தக்கதாய் இருந்திருக்கிறது என்பது புரியும். ஒரு க்ஷத்ரியன் சண்டாளனாவதும், சண்டாளன் தேவனாவதும் க்ஷத்திரியன் பிராம்மணன் ஆவதும், சட்டையைக் கழற்றி மாற்றுவது போல வித்தை காட்டும் வேலையாக இருந்திருக்கிறது.

காரணம் வருணமும், ஜாதியும் சரீரத்தைப் பற்றியது. வந்தேறிகள். ஔபாதிகத்வம் என்று அதைத் தான் குறிப்பிடுகிறார். நல்வினையோ தீவினையோ கூடுவதால் வருணங்கள் மாறும், பிறவியே மாறிவிடும். அதனால்தான் திருமங்கை ஆழ்வார் நாராயணநாமம் கொடுக்கும் முதல் கொடையாக'குலம் தரும்' என்கிறார். திரிசங்குவின் சண்டாளத் சரீரத்தோல் வார் யாகத்துக்கு உறுப்பானதாக விச்வாமித்ரன் மாற்றினான். ஏனென்றால் வருணம் என்பது ரூபாய் நோட்டு போல மாற்றத்தக்கதே – போதிய புண்ணியம் இருந்தால்.

புண்ணியம் என்பது இறையருள் அன்றி வேறில்லை. இறையருள் என்பது ஸ்ரீராமாநுஜர் போன்ற ஆசார்யர்களால் நமக்குக் கிட்டுவது. அந்த அருள் இருந்து விட்டால் வருணமோ, ஜாதியோ நமக்கு எந்த வகையிலும் தடையாகா. இது வைணவம் நமக்குத் தரும் வான் உயர்ந்த

செல்வம். அதனால் தான் வைணவம் மாறனேர் நம்பிகளின் பாததூசியை கோதூளியை விட உயர்ந்ததாக நினைத்தது. இந்த அடிப்படையில் தான் உடையவர் தம் வைஷ்ணவ கோஷ்டியிலே சகல வர்ணத்தாரையும் சமமாக நினைத்தார். இந்தக் காரணத்தால் தான் ஒரு பாணனும், ஒரு க்ஷத்திரியனும், ஒரு ம்லேச்சனும் ஆழ்வார் நிலை என்ற சம அந்தஸ்த்தைப் பெற்றார்கள்.

இன்னும் சொல்லப் போனால், தாவரம், விலங்கு, முதலிய ஜன்மங்கள் கூட உயர்ந்தவையாக கருதப் படும் கோட்பாடு உள்ளது தான் வாழ்விக்கும் நம் வைணவம். 87ம் சூர்ணிகையில் திர்யக் ஸ்தாவர ஜன்மங்களை பெருமக்களும் பெரியோரும் பிரார்த்திப்பர்கள் என்கிறார் நாயனார். குலசேகராழ்வார் ‘ மீனாய்ப் பிறக்கும் விதியுடையயேன் ஆவேனே’ என்றும், ‘எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனும் ஆவேனே’ என்றும் யாசிக்கிறார். வைணவத்தில் உங்கள் சரீரம் என்ன என்பதே முக்யமல்ல. நீங்கள் பிராம்மணராய் இருக்கலாம் அல்லது சண்டாளராய் இருக்கலாம் அல்லது யானையாகக் கூட இருக்கலாம். அதைப் பற்றி வைதிகமும் வைணவமும் கவலைப் படுவதில்லை. உங்கள் உள்ளம் எப்படி, எண்ணம் எப்படி, ஞானம் எப்படி என்பதைத்தான் வைணவம் எடை போட்டுப் பார்க்கிறது. காலம் காலமாக இந்துமதமே அப்படித்தான் இருந்த வந்திருக்கிறது.

சாணக்கியனுடைய ராஜதந்திர குணங்களை இந்து சமுதாயம் நன்கு புரிந்த வைத்திருக்கிறது. அவனை பாராட்டுமே தவிர, பாகவதன் என்று அவனைப் பணியாது. அச்வத்தாமனையும், துரோணரையும் அவர்கள் பிராம்மணர்கள் என்ற காரணத்துக்காக இந்து மதம் ஒரு நாளும் மன்னிக்க வில்லை. தவறு யார்செய்தாலும் தவறுதான் என்கிற நடுநிலைக் கொள்கைதான் இந்து மதத்தை இது நாள் வரை வாழ்வித்துக் கொண்டிருக்கிறது. பண்டைய சரித்திரத்தின் பக்கங்கள் ‘இந்தியாவின் புகழ்நிலை ஏனைய நாடுகளைத் தலைக் குனிய வைத்தது’ என்று கூறும்போது இந்தியாவுக்கு சாதி வர்ணம் ஆகியவை தடைகளாக இருக்கவில்லை என்பது தான் புலனாகிறது.

பொதுமக்களிடம் கைதட்டைப் பெற்று கழுத்து மாலை அணிந்து தலைவர்களாக வீதிவலம் வரவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் தம் ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஏதேதோ குதர்க்கம் பேசுகிறார்கள். குழறுகிறார்கள். வஞ்சனை சொல்வாரரடி! அவர் வாய்ச்சொல்லில் வீரரடி!